பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
08 06 2025 **SUNDAY** **7.15 PM**
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்திற்கு ஆபரேஷன் சிந்தூர் மூலம் உரிய பதிலடி கொடுக்கப்பட்டிருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.
- நாட்டின் வளர்ச்சியில் மகளிர் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
- தெலங்கானா அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.
- ஆகாஷ்வாணி 90-ஆவது ஆண்டு தினத்தை இன்று கொண்டாடுகிறது.
- சர்வதேச ஸ்குவாஷ் சம்மேளனத்தின் இரண்டு விருதுகள் இந்தியாவின் அனாகத் சிங்குக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

--இனி விரிவான செய்திகள்--

<<<<<>>>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்திற்கு ஆபரேஷன் சிந்தூர் மூலம் உரிய பதிலடி கொடுக்கப்பட்டிருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

தமிழகம் வந்துள்ள அமைச்சர், மதுரையில் கட்சி நிர்வாகிகள் பங்கேற்ற கூட்டத்தில் உரையாற்றினார்.

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத முகாம்கள் ஆபரேஷன் சிந்தூர் மூலம் தகர்க்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் இன்னும் முடிவடையவில்லை என்று அவர் கூறினார்.

தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் அமைச்சர் எச்சரித்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக-வை தோற்கடிக்க மக்கள் தயாராகிவிட்டதாகவும் அவர் கூறினார்.

திமுக ஆட்சியில் அனைத்துத்துறைகளிலும் ஊழல் நடைபெற்றுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

பின்னர் மதுரை நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு திரு அமித் ஷா புதுதில்லி புறப்பட்டு சென்றார்.

இதற்கிடையே, இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

*(Sound Byte - எல். முருகன் - 25 Sec.)*

<<<<<>>>>>>

நாட்டின் வளர்ச்சியில் மகளிர் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், முத்ரா கடனுதவித்திட்டத்தில் 68 சதவீத பயனாளிகள் மகளிர் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக, லட்சக்கணக்கான மகளிர் தொழில் முனைவோர்களாக உருவெடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஏழை மகளிரின் நலனுக்காக இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டத்தின்கீழ் 10 கோடி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

நாடு அனைத்துத்துறைகளிலும் விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

மத்திய அரசின் 11 ஆண்டுகால சாதனைகள் குறித்து எழுதியுள்ள கட்டுரையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகள் காரணமாக, 25 கோடிக்கும் மேற்பட்டோர் வறுமையின் பிடியில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டத்தின்கீழ், இதுவரை 3 லட்சத்து 68 ஆயிரம் கோடி ரூபாய், விவசாயிகளின் வங்கிக்கணக்குகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், 11 கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைந்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி அதிகரித்து வருவதாக கூறியுள்ள திரு ஹர்தீப் சிங் புரி, செமி கண்டெக்டர் துறையிலும் இந்தியா சாதனை படைத்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>>

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்று மத்திய அமைச்சர் திரு சிராக் பாஸ்வான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

Bhojpur–ல் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வளர்ச்சியை மட்டுமே தாரக மந்திரமாக கொண்டு தேசிய ஜனநாயக கூட்டணி செயல்பட்டு வருவதாக கூறினார்.

தங்கள் கூட்டணிக்கு மக்கள் செல்வாக்கு அதிகரித்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

தேர்தல் ஆணையத்துக்கு எதிராக காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி தொடர்ந்து தவறான குற்றச்சாட்டுகளை தெரிவித்து வருவதாக மகாராஷ்ட்ரா முதலமைச்சர் திரு தேவேந்திர ஃபட்நவிஸ் கூறியுள்ளார்.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களின் எண்ணங்களுக்கு மாறாக காங்கிரஸ் செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இதுபோன்று செயல்படுவதை திரு ராகுல்காந்தி தவிர்க்க வேண்டும் என்றும் திரு தேவேந்திர ஃபட்நவிஸ் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>

தெலங்கானா அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு விவேக் வெங்கடசாமி, திரு லஷ்மண் குமார், திரு ஸ்ரீஹரி, ஆகியோர் அமைச்சர்களாக பொறுப்பேற்றுக்கொண்டனர்.

ஹைதராபாதில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அம்மாநில ஆளுநர் திரு ‘Jishnu Dev Varma அவர்களுக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

இதனையடுத்து அமைச்சர்களின் எண்ணிக்கை 15-ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிகழ்ச்சியில் அம்மாநில முதலமைச்சர் திரு ரேவந்த ரெட்டி உட்பட பலர் பங்கேற்றனர்.

<<<<<>>>>>>

குஜராத் நகராட்சிப்பகுதிகளில் 107 கோடி ரூபாய் மதிப்பில், சாலை சீரமைப்புப்பணிகளை மேற்கொள்வதற்கு அம்மாநில முதலமைச்சர் திரு புபேந்தர் பட்டேல் ஒப்புதல் அளித்துள்ளார்.

மழை காலத்தில் சாலைகள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>>

ஆகாஷ்வாணி 90-ஆவது ஆண்டு தினத்தை இன்று கொண்டாடுகிறது.

1936-ஆம் ஆண்டு இதேநாளில், இந்திய ஒலிபரப்பு சேவை நிறுவனத்தின் பெயர் ஆல் இண்டியா ரேடியோ என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இதன்பின்னர் 1956-ஆம் ஆண்டு முதல் ஆகாஷ்வாணி என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

அன்று தொடங்கி இதுவரை 591 வானொலி நிலையங்கள் மூலம், 23 மொழிகளிலும், 146 வட்டார மொழிகளிலும் ஆகாஷ்வாணி ஒலிபரப்பு சேவையை வழங்கி வருகிறது.

98 சதவீத மக்களை சென்றடையும் சக்திவாய்ந்த ஊடகமாகவும் ஆகாஷ்வாணி திகழ்கிறது.

ஆகாஷ்வாணியின் வெளிநாட்டு சேவை பிரிவு 100 நாடுகளை சென்றடைகிறது.

வானொலி ஒலிபரப்பில் தனித்துவ முத்திரையுடன் பாரபட்சமின்றி நிகழ்ச்சிகளையும், செய்திகளையும் ஆகாஷ்வாணி வழங்கி வருகிறது.

<<<<<>>>>>>

நாடுமுழுவதும் வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம் மத்திய அரசின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வேளாண் விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கிலும், விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு குறித்து எடுத்துரைப்பதற்காகவும் இந்த இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தமிழகத்தின் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடைபெற்றுவரும் இந்த பிரச்சார இயக்கம் விவசாயிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இது தங்களுக்கு பெரிதும் உதவிகரமாக உள்ளது என்று அப்பகுதியை சேர்ந்த ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Voice Byte – விவசாயி – 41 Sec.)*

<<<<<>>>>>>

உத்தராகண்டையொட்டிய எல்லைப்பகுதியில் ராணுவ தளபதி ஜென்ரல் உபேந்திர திவேதி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

படைகளின் தயார் நிலை குறித்து அவர் ஆய்வு மேற்கொண்டதாகவும், வீரர்களுடன் கலந்துரையாடியதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>

குஜராத் மாநிலத்தில் நேரிட்ட இருவேறு சாலை விபத்துகளில் ஐந்து பேர் உயிரிழந்தனர். 3 பேர் காயமடைந்தனர்.

சுரேந்தர் நகர் - Dhrangadhra சாலையில் இருசக்கர வாகனம் லாரியின் மீது மோதி விபத்துக்குள்ளானதில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

சுரேந்தர் நகர் பகுதியில் நேரிட்ட மற்றொரு சாலை விபத்தில், இரண்டு பேர் உயிரிழந்தனர்.

<<<<<>>>>>>

அஸ்ஸாம் மாநிலத்தில் மழை வெள்ளத்தால் மூன்று லட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

12 மாவட்டங்களுக்கு உட்பட்ட 90 கிராமங்களில் வெள்ள நீர் சூழப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப்படையினர் மீட்புப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தாழ்வான பகுதிகளில் வசித்துவந்த 30 ஆயிரம் பேர் 130-க்கும் மேற்பட்ட நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அஸ்ஸாம் மழை வெள்ளத்தால் இதுவரை 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சர்வதேச ஸ்குவாஷ் சம்மேளனத்தின் இரண்டு விருதுகள் இந்தியாவின் அனாகத் சிங்குக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறந்த ஆட்டக்காரர் மற்றும் சிறந்த இளம் வீரருக்கான விருதுக்கு அனாகத் சிங் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

-------------------

தைவான் ஓபன் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஆறு தங்கம், மூன்று வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

மகளிர் 400 மீட்டர் தடை ஓட்டத்தில் வித்யா ராம்ராஜும், ஈட்டி எறிதல் ஆடவர் பிரிவில் ரோஹித் யாதவும், மகளிர் பிரிவில் அன்னு ராணி-யும் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் 800 மீட்டர் ஓட்டத்தில் Krishan Kumar தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 400 மீட்டர் தொடர் ஓட்டத்திலும் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

மகளிர் 800 மீட்டர் தடை ஓட்டத்தில் பூஜா தங்கப்பதக்கத்தையும், Twinkle Chaudhary வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் 400 மீட்டர் தடை ஓட்டத்தில், Yashas Palaksha வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிர் நீளம் தாண்டுதல் பிரிவில் Shaili Singh வெள்ளிப்பதக்கத்தையும், Ancy Sojan -ன் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

------------------

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்காக லண்டன் சென்றுள்ள இந்திய அணி இன்று தீவிர வலை பயிற்சியில் ஈடுபட்டது.

<<<<<END>>>>>>